**O.S.No.52/2018**

வா.சா.01, திருமதி. கலைச்செல்வி
நாள் : 28.01.2025 நேரம் : 04.20 P.M.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)குருசாமி ஆசாரிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஆண் பிள்ளைகள் 4, பெண் பிள்ளைகள் 2 பேர் ஆவார்கள். அவர்களது பெயர் கணேசன், நாகராஜன், கிருஷ்ணன், சுப்பிரமணி மற்றும் ஜானகி, பஞ்சவர்ணம், புஷ்பம் ஆகியோர் ஆவார்கள். 2 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையில் தாக்கல் செய்துள்ள விவரங்களை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். இவ்வழக்கின் 6ம் பிரதிவாதியாக சார்பதிவாளரை சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் சார்பதிவாளரை வழக்கில் சேர்த்துவிட்டு அரசை இவ்வழக்கில் சேர்க்காத காரணத்தால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அரசை இவ்வழக்கில் சேர்க்காத காரணத்தால் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. அரசை தரப்பினராக சேர்க்க நான் தயாராக உள்ளேன் என்றால் சரிதான்.

2)நான் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் மேலமுதுகுளத்தூர் குரூப் சர்வே எண். 257/5சி, கீழமுதுகுளத்தூர் குரூப் சர்வே எண். 7/1ஏ1 வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பூர்வீக சொத்து என்பதால் சேர்க்கவில்லை. பூர்வீக சொத்தில் தான் பாகம் கேட்க முடியும் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்களில் சொத்தை சேர்க்கவில்லை என்றால் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களிலும் நான் பாகம் கோர தயாராக உள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் சர்வே எண்கள் அனைத்தும் தவறு என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா குருசாமி ஆசாரியின் தகப்பனார்

தான் சுப்பையா ஆசாரி ஆவார். சுப்பையா ஆசாரி 21.11.1969 ல் பாகவிஸ்தீரண பத்திரம் எழுதினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குருசாமி ஆசாரியும், அவரது சகோதரர்களும் சேர்ந்து தான் 21.11.1969 ல் பாகவிஸ்தீரணம் செய்து கொண்டார்கள். அவர்கள் சொத்தை அவர்கள் பிரித்து கொண்டார்கள். மேற்படி குருசாமி ஆசாரியும் அவரது ஆண் பிள்ளைகளுக்கு மட்டும் பாகவிஸ்தீரணம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். அதில் எனது அத்தைக்கும் பங்கு கொடுத்துள்ளார்கள். மற்ற நபர்களுக்கு கொடுத்த விபரம் தெரியாது. அவ்வாறு எந்த பங்கும் பிரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

விசாரணை முடிவுற்ற நேரம்: 04.38 P.M

சாட்சியின் கையொப்பம்.